செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ ௨௯ உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அக] யாழ்ப்பாணம்:- சௌமிய ஞு பங்குனி மீ கச உ வெள்ளிக்கிழமை (27-3-1970) [இல-௫0

# சிவநெறி வளர்க்கும் வாழ்வு அவசியம்

## சுளிபுரத்தில் கந்தபுராணவிழா

[யாழ் சைவசித்தாந்த சங்க ஆதரவில் சுளிபுரம் பறுளையில் அண்மையில் நடைபெற்ற, கச்சியப்ப சிவாச்சாரியர் சுவாமிகள் குருபூசைத் தினத்தன்று தலைமை தாங்கிய தலைவர் திரு கா. சேனாதிராசா அவர்களின் தலைமைப்பேருரையின் சாரம்.]

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் விசேஷ அமைவுகள் பெற்ற, சுளிபுரம் என்னும் கிராமத்தில் சைவமதத்தவரைவிட, வேறொருமதத்தினரும் ஒருகாலத்திலுமில்லை. இக்கிராமம்வடகீழ்திசையில் சிவனும் அம்மையும், வடபகுதியில் வலப்பக்கத்தில் ஐமுகனும் இடப்பக்கத்தில் அறுமுகனும் கோயில்கொண்டெழுந்தருயிருக்கிறார்கள் தெற்கில் 63 அறுபத்துமூவர் குருபூசை மடமும், விக்ரேஸ்வரா கல்லூரியில் நடராசமூர்த்தியும், சிவகாமசுந்தரித் தாயும் எழுந்தருளி இருக்கிறார்கள். மேற்குப் பக்கத்தில் புனிதமான திவ்விய தீர்த்தத்தைத் தரும் "திருவடி நிலை" இருக்கின்றது இத் திருவடிநிலைச் சமுத்திரத்தில் இருதிருவடிகள் இருக்கின்றன. இத்திருவடிகள் இரண்டும் இராமபிரானின் திருவடிகள் என்று எம் முன்னோர் பரம்பரையாய் சொல்லி வந்தார்கள்.

கடற்கரையிலிருந்து மேற்குப் பக்கமாக மூன்று மைல் (கல்) தூரமாக இருக்கிறது பாதகங்கள், பகல் பத்துமணி வரையில் போய்ப்பார்த்தால் ஒருபெரும் ஆசனக்கல்லில் இரு பாதங்களையும் காணலாமாம சிவன் அம்மன், கணேசன், ஆலயங்கள் காலவரையறை சரிவரத தெரியவில்லை. சிவசுப்பிரமணியப் பெருமான் 1768-ம் ஆண்டு பறளையில் எழுந்தருளினார். இக்கோயில் கந்தப்புராணப் படிப்பால் உண்டானது. ஆனதால்தான் இக்குருபூசையை இங்கே செய்யத் தீர்மானித்தோம் காஞ்சிபுரத்தில் உள்ள குமரகோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானின் கட்டளைப்படி, கச்சியப்பசிவாசாரியார் சுவாமிகள் "திகடசக்கரச் செம் முகமைந்துளான்" என்று அடி எடுத்து, கந்தப்புராணம் 10000 பத்தாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுள்களை இயற்றினர். அப்புரா

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## இந்து சமய பாடத் திட்டம் பற்றித் "தினபதி" ஆசிரிய உரை (26-3-70)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்வகுப்பிற்கு 1971ம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரவிருக்கும் இந்துசமய பாடத்திட்டத்துக்கு நாடெங்குமுள்ள இந்துப் பெருமக்களிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது

பழைய பாடத் திட்டத்தை நல்லதென்று வரவேற்ற இந்துமத நிறுவனங்கள் பலவும் புதிய பாடத்திட்டத்தைப் பலமாகக் கண்டித்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

"புதிய பாடத்திட்டத்தில் "நவீன இந்துமதம்" என்ற பிரிவு சேர்க்கப்பட்டு உள்ளது. எமது இந்து சமயத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே இது தோன்றுகிறது தமிழ் எம். பீ. க்கள் இது சம்பந்தமாகத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" மேற்கண்டவாறு கூறுகிறது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை. சைவம் சம்பந்தப்பட்டமட்டில் இந்தச் சபையின் கருத்துக்கு நாட்டில் பெருமதிப்பு உண்டு.

புதிய இந்துசமய பாடத்திட்டத்திற்கு அகில இலங்கை இந்து மாமன்றம் பின்வருமாறு தனது எதிர்ப்பைத் தெரிவித்து இருக்கிறது. "கடந்த பல ஆண்டுகளாகப் பழைய பாடத் திட்டத்தில் இடம்பெற்று வந்த தேவார திருவாசகங்களுக்குப் பதிலாகப் புதிய பாடத் திட்டத்தில் கல்வித் திணைக்களம் செய்துள்ள மாற்றங்களினால் இந்த நாட்டில் சைவ சித்தாந்தமே இருந்த இடம்தெரியாமல் அழிந்துவிடும் போலிருக்கிறது. எனவே புதிய பாடத் திட்டத்தை உடனே ரத்துச் செய்ய வேண்டும்.

கொழும்பு விவேகானந்த சபையின் நிர்வாகக் குழுவும் கூடிப் புதிய பாடத்திட்டத்துக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. "புதிய பாடத்திட்டம் இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு உதவுவதற்கு மாறாக அதற்கு ஊறு செய்யும் தன்மையாகவே உள்ளது. அதனால் அந்தப் பாடத்தில் தக்க திருத்தங்களைச் செய்ய வேண்டும்" – இப்படிச் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது

இலங்கைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கம் புதிய பாடத்திட்டத்தை வன்மையாகக் கண்டித்திருக்கிறது. சங்கம் கூறுவதாவது:- "பழைய பாடத்திட்டம் இலங்கையில் உள்ள இந்துக்களால் கடைப்பிடிக்கப்படும் இந்துத் தத்துவங்கள், பண்பாடு ஆகியவற்றின் சிறப்பியல்களைக் கொண்டுள்ளது. ஆனால் புதிய பாடத் திட்டத்தில் அவை காணப்படவில்லை. "நாயன்மார்களின் பாசுரங்கள் உட்படச் சைவர்களின் நூல்களிலே பெரும் பகுதி நீக்கப்பட்டுவிட்டது. "சைவமும் தமிழும் வளர்த்தவரும் ஐந்தாங் குரவர் என்று அழைக்கப்படுபவருமான எங்கள் ஆறுமுக நாவலர் ஐயா அவர்களுக்கும் சைவத்திற்குப் புத்துயிர் அளித்த சான்றோர் பலருக்கும் புதிய பாடத் திட்டத்தில் இடம் அளிக்கப்படவில்லை.

அதே வேளையில் வங்காளம், குஜராத் ஆகிய இந்திய மாநிலங்களைச் சேர்ந்த மத, அரசியல் தலைவர்களுக்குக் குறிப்பிடத்தக்க

வளர்ச்சி 4-ஆம் பக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

### ஓரூரனல்லன்

மைப்படிந்த கண்ணாளுந்
தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையன்
என்னி னல்லான்
ஒப்புடைய னல்லன்
ஒருவனல்லன்
ஓரூரனல்லன் ஒருவமனில்லி
அப்படியும் அந்நிறமும்
அவ் வண்ணமும்
அவனருளே கண்ணாகக்
காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன்
இவ் வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக்
காட்டொணாதே

திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசுசுவாமிகள்.

### ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் கதாப் பிரசங்கம்

நல்லை. ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் தேவஸ்தானத்தைச் சார்ந்த திருப்பரங்குன்றம் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் 26-3-70 அன்று சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்தினர்கள். இதைத்தொடர்ந்து மதுரை ஆதீனத்தில் கதாப்பிரசங்கம் தொடர்பாக நடைபெறுகின்றது

நேயர் நெஞ்சம்

## பெரியார் திரு. சு. இராசரத்தினம் அவர்களின் தொண்டினை வற்புறுத்துவதற்கேயாகும்

கனம் ஆசிரியர்
"இந்துசாதனம்"
யாழ்ப்பாணம்
ஐயா,

"அளந்து பேசுதல் நலம்" என்னும் தலைப்பிலே தங்கள் 20-3-70 பத்திரிகையில் வெளிவந்துள்ள பேச்சு உண்மையில் அளந்து பேசிய பேச்சு என்பது அதனை நேரிற் கேட்ட எனக்குப் புலனாகின்றது. நாவலர் பெருமானின் பெருமையையோ சைவ சாதனங்களினது மகிமையையோ குறைத்துக் கூறிய பேச்சன்று அது. உண்மையில் உயர்த்திப் பேசிய பேச்சு அது என்பதனை, "எமது பாரம்பரியம் சமயத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதனாலும், நாவலர் பிரமசரியத்தை அனுட்டித்துத் தொண்டு செய்தார்" என்பதனாலும் அறியலாம். சைவப் பாடசாலைகளை நாவலர் பெருமானிலும் பார்க்கப் பெருந் தொகையாகத் திரு சு இராசரத்தினமவர்கள் நிறுவியமை, சட்ட சபைக்குச் சென்று சட்ட மூலம சைவத்திற்காக வாதாடியமை, தாய் தந்தையரற்ற சைவச் சிறுவர் சிறுமிகளை ஆயிரக் கணக்கில் உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வந்தமை, ஆயிரத்திற்கு மேற்பட்ட சைவாசிரியர்களை நாவலர் கண்ட கனவிற் கேற்ப உருவாக்கியமை முதலியவற்றால், "சிலவிடயங்களில் திரு. இராசரத்தினமவர்களுக்கு நாவலர் பெருமானிலும் நாம் கடமைப்பட்டுள்ளோம்", எனவே பெரியார் தம பேச்சில் உரைத்தமை அவரின் அருந் தொண்டின் பெருமையை வற்புறுத்துவதற்கேயாகும்.

க. கணபதிப்பிள்ளை
துணைக் காரியதரிசி.
சைவ பரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 21-3-70.

### இந்து மாமன்றம்

அகில இலங்கை இந்து மாமன்றத்தினது 15 ஆவது வருடாந்தக்கூட்டம் (27-3-70) காலை $9\frac{1}{2}$ மணிக்கு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெறும். (ந. நி.)

### காரைக்காலம்மையார் குருபூசை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 26-3-70 வியாழக்கிழமை காரைக்காலம்மையார் குருபூசை சைவப்பெரியார் திரு த குமாரசாமிப்புலவர் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. ஸ்ரீமத் தி. கலியாண சுந்தரக்குருக்கள் தமிழ்மறையோதினர்கள். வித்துவான் க கணபதிப்பிள்ளை B. A. "காரைக் காலம்மையார் காட்டிய நெறி யென்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள்.




பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சௌமிய ஞு பங்குனி மீ கச-உ வெள்ளிக்கிழமை [1970

## திருநெல்வேலி சைவ அநாதசாலை

காலஞ்சென்ற சைவப்பெரியார் திரு. சு. இராசரத்தினம் தாபித்த இருநூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகள் அரசாங்கத்தால் தேசியமயமாக்கப்பட்டன. சைவாசிரியர் கலாசாலை துரதிஷ்டமாக மூடப்பட்டது. சைவவித்தியாவிருத்திச் சங்கத்துக்கு மிஞ்சியிருப்பது திருநெல்வேலி சைவ அநாதசாலையே. அத்தாபனம் நமது நாட்டுக்குச் செய்த தொண்டு அளப்பரியது. அதனை இவ்வளவு காலமும் பலவித கஷ்டங்களுக்கிடையிலும் திறம்பட நிருவகித்துவந்தமைக்காக சைவஉலகம் திரு. சு. இராசரத்தினம் அவர்களுக்கு போதியளவு நன்றி கூறமுடியாது. அநாத பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலந்தொடக்கம் நூறறுக்கணக்கான அநாதப்பிள்ளைகள் இலவச உணவு, உடைபெற்று உயர்தரக் கல்விகற்று அரசாங்கத்தில் உயர்ந்த பதவிலிருக்கின்றார்கள். எதிர்காலத்திலும் அத்தாபனம் ஏழைகளாயுள்ள பிள்ளைகளுக்கு உதவி புரியக் கூடிய முறையில் அதனை நிருவகிக்கக் கூடிய ஒழுங்குகளைப் புரிந்துவைப்பதே திரு. இராசரத்தினம் அவர்களுக்கு நாங்கள் காட்டக்கூடிய நன்றியறிதலாகும்.

இற்றைப் பிரசுரத்தில் பண்டைத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபரும், சுற்றத்தவர்களும் ஷெ அநாத சாலையிலுள்ள பிள்ளைகளுக்கு மூன்று தினங்களுக்குப் போசனம் வழங்கினார்களென அறிகின்றோம். அவருடைய தருமசிந்தனையை நமது நாட்டிலுள்ள வள்ளல்களும், பொதுத் தாபனங்களும் பின்பற்றிக் குறித்த அநாதசாலைக்கு உதவிபுரிய முன்வருதல் வேண்டும். திரு இராசரத்தினம் அவர்களது உருவப் படத்தை ஷெ அநாத சாலையில் தொங்கவைப்பதற்கு அவர் சம்மதமளிக்கவில்லை. தாபனம் நன்றாக இயங்க வேண்டுமென்பதே அவருடைய குறிக்கோள். சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினது தற்காலத் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் அவர்களும் மற்றைய உத்தியோகத்தர்களும், உறுப்பினர்களும சங்கத்தை புனருத்தாரணஞ் செய்து அநாதசாலையை செவ்வனே நடத்தக்கூடிய வழிவகைகளைக் கையாளுவார்களாக.

அநாதசாலைப் பிள்ளைகள் ஒவ்வொன்றுக்கும் அரசாங்கம் வழங்கும் நன்கொடையை கூட்டுதற்குரிய முயற்சியைக் கைக்கொள்ளுதலும் நலம்.

ஏழைப் பிள்ளைகளுக்கு உணவு, உடை உதவி அளித்து கல்வி கற்பிப்பதே தருமங்களுக்குள் மேலான தாகும்.

## ஆசிரியர் எல்லோரும் போற்றுவர்

திரு. மா. பீதாம்பரன், திருக்கோணமலை

வெண்பா

1. நாவலரே பொன்ராம நாதனார் மட்டுநகர்
மேவும் விபுலமணி வித்தகனார் — சேவையினைப்
போற்றுவார் போற்றும் புகழ்மிக்க ராச நீ
ஆற்றியநற் றெண்டளப்பார் யார்.

2. சைவக் கலைவளர்க்க சாமி நீ என்றுலகம்
பொய்யல்ல போற்றுவது புண்ணியனே — மெய்வருந்தம்
பாராய் பசிநோக்காய் கண்டுஞ்சாய் பார்த்துவரும்
சீராம் பணியைச்சிந் தித்து.

3. சைவவித்யா சங்கமதைத் தாபித் திலங்கையெங்கும்
உய்யவைத்த உத்தமனே எங்குற்றய் — செய்வநெறி
தேசத்தில் நாட்டினுய் செந்தமிழ்தேர் கல்லூரி
ஆசிரியர் ஆக்கினுய் அன்று.

4. ஈழம் முழுவதிலும் சைவக் கலைவளர்த்த
ஆழ்ந்த அறிவமைந்த 'அட்வக்கேற்' — வாழ்க்கையிலே
தன்பணியைச் செய்தார்; தலைவனடி சார்ந்தார்;
மன்புகழை நாட்டினர் வாழ்ந்து.

5. பேச்சளவில் நில்லாது செய்தாய் பெரும்பணிகள்;
எச்சளவில் நின்றேனும் எங்கினர் — 'ஆச்சரியம்
அன்னாரின் ஆற்றலென' ஆசிரியர் எல்லோரும்
பண்ணுளும் போற்றுவரே பார்.

## சைவக்கலை வளர்க்கும் கந்தன் நன்னூல்

[பண்டிதர் செ. சிவப்பிரகாசம் ஆசிரியர், கோக்குவில்]

ஆசிரிய விருத்தம்

திருவளநற் தமிழ்நாடு செய்தவத்தால்
வந்துதித்த சிறந்த ஞானன்
கருவளரும் பிறவியிடர் களைவதற்கே
கந்தருனருட் கதையை நன்கு
உருவளருங் கந்தபுரா ணத்துள்ளே
பொதிந்துதிரு அருளி னுலே
பொருவரிய பொக்கிஷமாங் கந்த நன்னூல்
காசினியிற் பொன்போற் செய்தோன். 1.

அருள்வேண்டி வேண்டுநர்க்கு அரியதிரு
வரள்பொழிவும் அருணு லன்றிப்
பொருள்வேண்டி வேண்டுநர்க்குப் பொருள்பலவும்
பொன்னுக்ப் பொழியும் நன்னூல்
தெருள்வேண்டி வேண்டுநர்க்குத் தெள்ளமுதாய்த்
தித்திக்குந் சிறந்த ஞானம்
மருள்நீக்கி மன்பதைகட் கருள்கந்த
புராணமுயர் மாண்பிற் செய்தோன். 2.

கச்சியப்ப னென்றெவருங் காதலித்துக்
கழறுமுயர் கல்வி ஞானன்
உச்சியிற்கொண் டாடுமுயர் உள்ளத்துள்
ளொளிவிளக்காய் ஒளிருந் தீபன்
மெச்சுபல கவிராயர் மெச்சிடவே
மேலான அருள்சேர் பாவால்
இச்சகத்தி லினிதியற்றி இன்னருளா
கரனெனவே இலங்குந் தூயோன். 3

அமரரிடர் தீர்த்திட்ட அறுமுகவன்
திருக்காதை வாழி! வாழி!
குமரனருள் கொண்டதிரு விருத்தப்பா
குவலயத்துள் வாழி! வாழி!
நமதரிய கலைவிளக்குங் கந்தநன்னூல்
நானிலத்து வாழி! வாழி!
நமதினிய நாநயக்க நாம்நயக்குங்
கச்சியப்பன் வாழி! வாழி! 4.

வேறு

ஆறுதிரு வதனங்கள் வாழி! வாழி!!
ஆறிரண்டு திருப்புயங்கள் வாழி! வாழி!!
கூறரிய ஆறெழுத்தும் வாழி! வாழி!!
குலவுதிரு வேற்படைதான் வாழி! வாழி!!
பேறுகவுங் கந்தநன்னூல் வாழி! வாழி!!
பேசரிய திருவருளே வாழி! வாழி!!
ஆறுமுக நாவலர்தம் திருப்பேர் தாங்கும்
அரியகந்த புராணசபை வாழி! வாழி!!

## சிவநெறிவளர்க்கும் வாழ்வு

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

ணத்தை அரங்கேற்ற அவர் விரும்பினார் சபையைக்கூட்டினார், அப்பொழுது சபையிலுள்ள புலவர்கள், "திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்றபதத்திலுள்ள "திகடசக்கர" என்னும் சொல்லிற்கு இலக்கணப் கூறும்படியும், அதை அத்தாட்சிப்படுத்த இலக்கண நூல் வேண்டும் என்றும் சொன்னார்கள். கச்சியப்பரிடம் பதில் கூறவில்லை. ஆனதால், அன்று அரங்கேற்றப் படவில்லை. நிரம்பிய கவலையுடன் அடியெடுத்துக்கொடுத்த எம்பெருமானைத் தியானித்துக்கொண்டுநித்திரையாய்விட்டார். அதுகண்டு பரமகருணாநிதியான எம்பெருமான் தனது அடியவனுக்கு சொப்பனத்தில்தோன்றி, "கவலைப்படாதே, சபையை இரண்டாமுறை கூட்டு, நான் அங்கு ஆட்சேபத்தைத்தெளிவிக்க ஆதாரமான வீரசோழியம் என்னும் நூலைக் கொண்டுவந்து அத்தாட்சிப்படுத்துவேன்" என்று சொல்லி கச்சியப்பரைவிட்டு ஏகினார். கச்சியப்பர் இரண்டாமுறை சபையைக்கூட்டினார். அச்சபைக்கு சொல்லப்பட்ட நேரத்தில், முருகப்பெருமான் சந்நியாசி வேடம் பூண்டு வந்து "வீரசோழியம" என்னும் இலக்கண நூலைகாட்டி அத்தாட்சிப்படுத்திஅரங்கேற்றிவிட்டு திடீரென மறைந்தார்.

எல்லோரும் திகைத்து ஆச்சரியமடைந்தார்கள். சில புலவர்கள் கச்சியப்பர் சுவாமிகளின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தார்கள். அடியார்க்கெளியவன், தனது பக்தனான கச்சியப்ப சிவாசாரியரின் பெருமையை உலகறியச் செய்தார். இப்படிப்பட்ட சுவாமிகளுக்கு, குருபூசை செய்ய வேண்டியது அவசியம், சைவசமயத்தவரின் முதல் கடமை' தென்னிந்தியாவில் அவரின் குருபூசை சில இடங்களில் செய்கிறார்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சபாபதி நாவலர், அம்பலவாணநாவலர், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் பிறந்த இந்த யாழ்நகரில் நாங்கள் இதுவரைகாலம், கச்சியப்பசிவாசாரியர் குருபூசையை செய்யாமல்விட்டது எங்கள் மேல குற்றம். குற்றத்தை ஒப்புக்கொண்டு சண்முகப்பெருமாக் கட்டளைப்படி இன்று பருத்தியில் சுவாமி சந்நிதானத்திலுசுவாமிக்கு 11 (பதினொரு) கும்பம் வைத்து பெரிய அபிஷேக ஆராதனை செய்து, சண்முகார்ச்சனை செய்து, பிராமண சமாராதனை செய்து, மகேசுரபூசைசெய்து இக் குருபூசையை முதல் முதல் பூர்த்தி செய்தோம். நிகழ்ச்சி நிரலின்படி விக்ரோறியாக் கல்லூரியிலுள்ள நடராசமூர்த்தி - சிவகாமசுந்தரித் தாயின் சந்நிதானத்திலிருந்து கந்தபுராணத் திருமுறையை அரோகரா கோஷத்துடன், பிள்ளைகளும், அதிபரும், உபாத்திமார்களும் ஊர்ச்சனங்களும் பருத்தியில் கொணர்ந்துவந்து சேர்த்தார்கள் சுவாமியை வணங்கினார்கள், "கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன் நற்றாழ் தொழாரெனின்" என்று, பொய்யாமொழியார் சொன்னவிதம்போல, எத்துறையிலும் எம். ஏ. பி. எச். டி. பட்டம் பெற்றாலும், பசுபதீஸ்வரரான பகவானை வணங்கி, ஆன்ம ஈடேற்றமாகிய மோட்ச சம்பிராச்சியத்தை ஆண்டவனிடம் பெற்றாலன்றி, மானுட சென்மம் எடுத்ததும் பயனில்லை இக் காலத்தில் ஆணும், பெண்ணும் சினிமாப் படம் பார்க்கிறார்கள். சினிமாப் பாட்டுக்கள் பாடுகிறார்கள். தேவாரம், திருவாசகம் என்ற கடவுளரின் சிறப்பு அமைந்த பாடல்களைக் கைவிட்டார்கள். ஆலய வழிபாட்டை குறைத்துக் கொண்டார்கள். விரதம் அனுட்டிப்பதை குறைத்துக் கொண்டார்கள், சுவாமிசந்நிதியில் அஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வெட்கப்படுகிறார்கள். தேகமே ஆத்மா, போகமே மோட்சம் என்கிறார்கள், மெய்ஞ்ஞானம் குன்றி அஞ்ஞானம மேலிட்டமையினால், விஞ்ஞானத்தைப் பெரிதாக எண்ணி, அதனையே பின்பற்றுகிறார்கள். சைவ மக்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## யாவரும் பின்பற்ற வேண்டிய தருமம்

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் திரு. ந. சிவஞானம் அவர்களும் சுற்றத்தவர்களும் சென்ற 14, 15, 22-3-70 ஆம் திகதிகளில் தங்கள் செலவில் திருநெல்வேலி சைவ அநாதசாலைப் பிள்ளைகளுக்குச் சிறந்த முறையில் மதய போசனம் வழங்கினார்கள். திரு. சிவஞானம் அவர்களுடைய ஈகையை மற்றைய சைவாபிமானிகளும் பின்பற்றி சைவ அநாதசாலைக்கு தங்கள் தங்களாலியன்ற உதவியைப் புரிவார்களாக.

## பரதநாட்டிய அரங்கேற்றம்

27-3-70 மாலை 6-30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ப. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் செல்வி, அன்னபூரணி முத்துக்குமாரன் அவர்களினது பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெறும். போஷகராக நீதியரசர் உயர்திரு. வி. சுப்பிரமணியம் அவர்களும் பிரதமவிருந்தினராக விருத்திய ஜோதி குமாரி ஹேமமாலின அழைக்கப்பட்டிருககின்றார்கள்.

## அணிந்துரை அரங்கம்

சாதாரண வருஷ
வாக்கிய பஞ்சாங்கம்
(1970 – 71)

இரகுநாதையர் அவர்கள் சகோதரரின் புத்திரன் இ. வெங்கடேச ஐயரால் கணிக்கப்பெற்றது.

விலை ரூபா 2-00

கிடைக்குமிடம்:
சோதிடவிலாச புத்தகசாலை
இல: 46, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

303 ஆண்டுகளாக இடைவிடின்றி பரம்பரை சோதிடநூல் வல்ல பிராமண குடும்பத்தினரால் இப்பஞ்சாங்கம் பிரசுரிக்கப்பெற்று வருகின்றது. எமக்குக் கிடைத்த பிரதி மங்களகரமான மஞ்சள் உறையுடன் பஞ்சாங்க உறுப்புக்கள், சுப தினங்கள், விடுமுறை நாட்கள் முதலிய விபரங்களுடன் அழகாக 100 பக்கங்களுடன் வெளிவந்திருக்கின்றது. ஒவ்வொருவருடைய இல்லத்திலும் இருக்க வேண்டிய நூல்.

## சிவநெறி வளர்க்கும்

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

கள் சிலர் மது அருந்துகிறார்கள், மாமிசம் புசிக்கிறார்கள் இப்படிப்பட்டவர்கள் கோயில்களில் படிப்பு நடக்கும் போது, கந்தப் புராணம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் இவைகளைத் தாம் படிக்கவிரும்புகிறார்கள் இது சரியா? சிவபூசை செய்த குடும்பங்களில் கரடி புகுந்து விட்டது. ஐயகோ, நம்மவர்கள் எப்போதான் திருந்துவார்கள்? நாங்கள் இக் குருபூசையை வட இலங்கையில் பருத்தியில் செய்கின்றோம். ஒவ்வொரு வருடமும் செய்யத் தீர்மானித்துள்ளோம்.

ஆம் பொருள் நமதேயானால், அறம்பிறர்க்காவதுண்டோ" நாம் பதிபுண்ணியம், பசு புண்ணியம் இரண்டையும் இயன்ற வரை செய்யவேண்டும். கந்தவிரத படலத்தில் சொல்லப்பட்ட விரதங்களை எம்முன்னோர் அனுட்டித்து முருகப்பெருமானின் அருளைப் பெற்றார்கள் நாங்களும் அப்படியே செய்வது உசிதம். விக்ரோறியாக கல்லூரியில் கோயிலைகட்டி, சிதம்பர நடராசமூர்த்தியையும் சிவகாமித் தாயையும் வணங்கும்படி செய்து தந்த முன்னைநாள் பிறின்சிபல் அவர்களுக்கும் அவருடன் ஒத்துழைத்த உபாத்தியாயர்கட்கும், சுளிபுரம் அயல் கிராமங்களுக்கும். யாழ். சைவ சித்தாந்த சங்கமும் கடமைப்பட்டுள்ளது. 37 வருடகாலம் சுளிபுரத்திலிருந்து சைவ சமயிகட்கும் மறசமயிகட்குமாம் நூல்களை எழுதித் தந்தார் சைவப் பெரியார் அவர்களைப் போற்றுவதுடன் இக்கல்லூரியில் (விக்ரோறியா) கந்தப்புராண அபிவிருத்திக்காக கச்சியப்பசிவாசாரியர் சுவாமிகள் ஞாபகார்த்த நிதி ஒன்று ஏற்படுத்த வேண்டிய அவசியம் வந்துள்ளது. இதைப்பற்றி சைவப் பெரியாரின் மாணவர்கள் சிந்திக்க வேண்டும்.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

### ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ் ஆங்கிலப்பத்திரிகைகளின் சந்தாதாரர்களைத் தங்கள் சந்தாப்பணத்தை நிலுவையின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். அதிபர்,

## மேன்மை கோள் சைவ நீதி

4- ஆம் பக்கத்தின் வளர்ச்சி )

"நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" —நாவலர்

புண்ணியஞ் செய்து நற்கதியடைய வேண்டிய நாங்கள் பாவஞ்செய்து சதா அலையலாமா? உங்கள் பிள்ளைகளை புனிதமான சைவ வாழ்க்கையை நடத்த இடங்கொடுங்கள். கொல்லாதவனையும், ஊன் புசியாதவனையும் எல்லா உயிரும் கைகூப்பித் தொழும், ஊன் உண்டவனுடைய மனம் அவனை நன்மையானவற்றை செய்யவிடாது, மாமிசம் உண்பவரிடம் அருள் உண்டாகாது. மாமிச போசனம் அருளில்லாதார் செய்கையாகும். அருள் இல்லாதவர்கட்கு மோட்சம் இல்லை; அவர் செய்யும் அறம் பயனில்லாத அறமாகும் கொலை செய்பவரும், கொலை செய்தற்கு காரணராய் உள்ள மாமிசம் விற்பவரும், புசிப்பவரும் புலையராவர். மாமிசம் உண்பது தீமையெனவெண்ணி விரத தினங்களில் அதனை தவிர்க்கின்றீர்கள். ஏன் அதனை என்றும் தவிர்த்தாலென்ன?

"செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை
நோந்தக்கால் எய்தவருமோ இருநிதியம்"

இனிவரும் பிறவிகளிலாவது நல்வினை செய்ய வேண்டாமா? காந்தி நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இக்காலத்தில் அவரின் விரதங்களாகிய மது அருந்தாமை, ஊன் புசியாமை, வியபிசாரம் செய்யாமை ஆகிய மூன்றினையும் மேற்கொண்டு ஒழுகுதல் சிறப்பு. அறியாமற் செய்த குற்றத்திற்கு மன்னிப்புண்டு. அறிந்து செய்யும் குற்றத்திற்கு கூடிய தண்டனை தப்பாது கிடைக்குமல்லவா? இந்த அவல நிலையிலிருந்து தப்புவதற்கு வழியுண்டு, மனமுண்டானால் இடமுண்டு. மாமிசத்தை விடுங்கள். அல்லது அதனை பிள்ளைகளுக்காவது கொடுக்காதுவிடுங்கள். இறைவன் உங்களுக்கு அருள் புரிவான்.

—ஒரு சைவன்

### கோட்டு விற்பனவு விளம்பரம்

ஆறுமுகம் நாகரத்தினம் 1-ம் ஒழுங்கை, டலாலி றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். —வழக்காளி

வழ: M. B. 9230 எதிராக

1. தம்பு கந்தையாவும் 2. பெண் நாகபூரணமும்
இருவரும், கந்தர்மடம், யாழ்ப்பாணம். எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9230ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னும் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம் ஆண்டு மே (வைகாசி) மாதம் 7-ம் திகதி (7—5—70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபா 1960/- 10-7—67 தொடக்கம் 16 -5—68 வரைக்கும் ரூபாய் 1000/—க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமளவரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 339—15 சதமும் இதில் ரூபாய் 500/- குறைக்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடக்கிலுறு "ஆத்திபுல" காணி நிலப்பரப்பு $11\frac{1}{2}$ குழியும் வீடும், வடக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப் பங்கும் வழிவாய்க்காலுரித்தும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை; வடக்கு வைரவி சரணமுத்துவின் உரிமையாளரின் ஆதனம்; மேற்கும் தெற்கும் புகையிரத வீதி,

க. சரவணமுத்து
173, குருசோவீதி சுண்டிக்குளி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 5-3-70 எம். 475 27-3-70


# THAMBY & Co.

ACCEPT

**I. Fixed Deposits**

at the following **Rates of Interest**

| | | |
|---|---|---|
| 1 Year | 9 % | per annum |
| 2 Years | 10 % | ,, ,, |

FOR CHARITABLE INSTITUTIONS

12 % per annum

INTEREST IS PAYABLE ANNUALLY

N. B. These Deposits could be Withdrawn At Any Time by Giving the Firm 30 DAYS WRITTEN NOTICE

**II. Call Deposits**

THESE DEPOSITS COULD BE WITHDRAWN by giving the FIRM

30 Days Notice — Interest @ 8 % per annum
or 7 ,, ,, — ,, 7 % ,,

**III. Savings Deposits**

at the following RATES OF INTEREST

6 % per annum on MONTHLY MINIMUM BALANCES

10 % { ,, ,, ,, ,, ,, FOR CHARITABLE INSTITUTIONS

*Head Office:* THIRUNELVELY, JAFFNA
*Branch* ,, : VANNARPONNAI, JAFFNA


### கோட்டு விற்பனவு விளம்பரம்

கொக்குவில், கொக்குவில் மேற்கு கந்தையா செல்லத்துரை
வழ: இல M. B. 10335 எதிராக

1. சண்முகம் கந்தையாவும் 2. பெண் செல்வராணி இருவரின் விலாசம் வண்ணார்பண்ணைமேற்கு, வண்ணார்பண்ணை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 10335ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னும் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆண்டு சித்திரை மீ 30-ந் திகதி (30-4-70) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3980-95ம் 27—9—68 தொடக்கம் 11-4-69 வரைக்கும் ரூபாய் 2000/—க்கு 10 வீத வட்டியும் (எக்காரணம் பற்றியும் முழுத்தொகை ரூபா 4000/—க்கு மேற்படாமல்) அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்குமளவரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 392—30 இதில் ரூபா 150 கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை "மூயபீவழவும் மூத்தணவழவும்" பர. நில. இலா. $\frac{1}{2}$ பயிர்களும் வடகிழக்கில் இருக்கும் கிணற்றில் 3/16 பங்கும் அக்கிணற்றுக்கு போக்குவரத்து பாதை பாவிப்புரித்தும் கிழக்கிலிருக்கும் ரோட்டுக்கு வடக்கெல்லைக்காணியூடாக போக்குவரத்து உரிமையும் இதற்கெல்லை கிழக்கு மேற்கும் சின்னக்குட்டி முத்துத்தம்பிக்கும் பெண் தயாலக்ஷ்மிக்குமுரிய காணி, வடக்கு தம்பையாவின் பெண் செல்லத்தின் காணி. தெற்கு கதிர்காமர் சின்னத்துரைக்கும் பெண் முத்தம்மாவுக்குமுரிய காணி.

14, டேவிற் வீதி, அ. போ. எதிர்மனசிங்கி
யாழ்ப்பாணம், கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
13-3-70 எம் 473 27—3—70

### கோட்டு விற்பனவு விளம்பரம்

1. வயித்திலிங்கம் சஞ்சீவலிங்கம்
"அப்ஸ்ரெயல்" ரெமபின் வீதி, யாழ்ப்பாணம்.

M. B. 6974 எதிராக —வழக்காளி

1. பொன்னையா யேம்ஸ்சும் பெண்
2. மாகிறேற் இருவரும்
இல: 17/1, றெயில்வே குறுக்குத்தெரு (ரெம்பிள்வீதி)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம், —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 6974-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னும் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ஆம் ஆண்டு வைகாசி மாதம் 2-ந் திகதி (2-5-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 6015/—ம், 13-10-64 தொடக்கம் 20-7-65 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமளவரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 359-35

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி மறகுகாடு இறை "மாதனதறை" நில. பர. $1\frac{1}{2}$ (ஒண்டரையும்), கல்வீடும், கிணறும் பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு வயித்திலிங்கம் இராசையாவுக்கும் பெண் றகுபதிக்கும் சொந்தமான ஆதனம்; மேற்கு கணபதி முத்துத்தம்பியின் ஆதனம். தெற்கு ஐயாத்துரை பெண் அழகம்மாவின் ஆதனம். இதடங்கலும்.

Regd No. D. 294/248

காரந்தனை தெற்கு, J. A. எட்வேட்,
ஊர்காவற்றுறை கொமிஷனர் & விலைமதிப்பாளர்
18-3-70 M 469 27-3-70

### கோட்டு விற்பனவு விளம்பரம்

1. M, நடராசாவும் 2. பெண் சிவபாக்கியமும் இருவரும்,
தொல்புரம் —வழக்காளிகள்

வழ. இல. M. B. 10534 எதிராக

1. ஆறுமுகம் சின்னத்தம்பியும் 2. பெண் சின்னம்மாவும்
இருவரும், தொல்புரம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின், M. B. 10534-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னும் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆண்டு சித்திரை (ஏப்பிறில்)மீ 30-ம் திகதி (30-4-70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— ரூபா 2626/- ம் 12-1-69 தொடக்கம் 30-7-69 வரை ரூபா 2000/- க்கும் 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 365/50 சதமும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று தொல்புரம் இறை "புதரன்" நெற்செய்கை நிலப்பரப்பு 1½ இதில் மேற்குப் பக்கமாக மிச்சமாக இருக்கும் நிலப்பரப்பு நெற்செய்கை 10 (Lms P. C.) யும் கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப் பங்கும் தூர்வை உரித்தும் நீர்வாய்க்கால் உரித்தும் எல்லை கிழக்கு: பொன்னம்பலத்தை விவாகம் செய்ய இருக்கும் பெண் தங்கேஸ்வரியின் ஆதனம் வடக்கு: கணபதிப்பிள்ளை சின்னத்தம்பியும் சகோதரனினதும் ஆதனம். மேற்கு: றோட்டும்; முருகேசு கதிரவேலுவின் ஆதனமும். தெற்கு: பொன்னர் சின்னத்துரையின் ஆதனம்.

க. சரவணமுத்து
173, குருசோ வீதி, சுண்டிக்குளி, கொமிசனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 23-2-70 எம். 476 27-3-70

## திருக்கேதீஸ்வரம்

திருக்கேதீஸ்வர அலங்கார உற்சவம் எதிர்வரும் 6-4-70 திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

x x x

## மருதடி

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் திருவிழா 29-3-70 ஆரம்பமாகின்றது. (ந. நி)

x x x

## சீரணி, நாகம்மை கோவில்

சண்டிருப்பாய் சீரணி நாகம்மை திருவிழா 12-4-70 ஆரம்பம்.

நேயர்கள் நெஞ்சம்

# நீதிவிளங்குக

நாவலர் பெருமானின் குறிக்கோள்களை நிறைவேற்றி வரும் சைவ பரிபாலன சபையைத் தொடர்ந்து — தற்போது நடைமுறையிலிருந்துவரும் க.பொ.த. உயர்தர வகுப்பு இந்து சமய பாடத் திட்டத்தை (1971 தொடக்கம் மாற்றியமைக்கும் முயற்சியை பல சைவ சமயத் தாபனங்கள் எதிர்த்துத் தத்தம் கருத்துக்களை வெளியிட்டு வருவது வரவேற்கத் தக்கதே. இதுபற்றிய எமது கழகத்தின் கருத்தை தங்கள் பத்திரிகையில் வெளியிட்டமைக்கு மிக்க நன்றி. இந்து சாதனம், ஈழநாடு, தினபதி ஆதிய பத்திரிகைகள் இதுபற்றி ஆசிரியத் தலையங்கத்தில் தம்கருத்துக்களை வெளியிட்டமை சைவப் பெருமக்கள் உள்ளங்களுக்கு ஆறுதல் தருவதாகும். 26—3—70 தினபதி ஆசிரிய உரையை இந்து சாதனத்திலும் வெளியிடுவது விரும்பத் தக்கது. நீதி வெல்லும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

இங்ஙனம்
கா. இரகுநாதன்
செயலாளர்,
யாழ். சைவ சமய அபிவிருத்திக் கழகம், நாயன்மார்கட்டு.
26—3—70.

## பாராளு மன்றம்

25-3-70 நள்ளிரவு பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. மாற்று அரசாங்கம் நியமிக்கப்படும்வரை திரு டட்லி சேனநாயக்கா அவர்கள் தலைமையில மந்திரி சபை நாட்டை ஆளும் பொறுப்பை நிருவகிக்கும். தேர்தல் பிரசாரம் நாடெங்கணும் விறுவிறுப்புடன் ஆரம்பித்துவிட்டது.

## ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுதல் கூடாது.

1965 க்கு முன் ஆசிரியர்கள் பலர் தவறாக அரசியலில் ஈடுபட்டனர். குறித்த ஒழுங்கீனத்தை எங்கள் அரசாங்கமே நிறுத்தி வைத்தது. தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டபின் பழைய படி ஆசிரியர்கள் அரசியலில் பிரவேசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் போலிருக்கின்றது அதனால் அவர்கள் கடமையில் குறைவு ஏற்படும். ஆசிரியர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவிருந்தாலும் தங்கள் அரசியற் கொள்கைகளை பாடசாலைக்குள் பரப்ப முன்வருதல் தவறு" இவ்வாறு கல்வி மந்திரியவர்கள் மீ ப வெ லா அமரசூரியா மகா வித்தியாலய இரசாயன ஆய்வுச் சாலைத் திறப்பு விழாவில் அண்மையில் கூறினார்.

## 1000 பட்டதாரிகள்

வேலையற்றிருக்கும் ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரியர்பதவி வழங்கப்படுவதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் இம் மாதம் 28 ந் தேதியிலிருந்து ஏப்ரில் மாதம் 10-ஆந் தேதிவரை கல்வி அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்படும். 18 வயது தொடக்கம் 45 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். தெரிவு செய்யப்படும் ஆயிரம் (1000) பட்டதாரிகளுக்கும் மே மாதம் முதல் திகதி நியமனம் வழங்கப்படுமென அறிகின்றோம்.

## இந்து சமய பாடத் திட்டம்பற்றி......

( 1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி )

அளவு இடமளிக்கப்பட்டிருக்கிறது. "எனவே, புதிய பாடத் திட்டத்தை நீக்கிவிட்டுச் சைவப் பண்பாட்டுக்கும் பாரம்பரியத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் புதிய பாடத்திட்டத்தை உருவாக்க வேண்டும்" இப்படி இலங்கைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கம் வற்புறுத்தியிருக்கிறது.

இந்துசமய பாடத்திட்டம் இந்துகளுக்குப் பயன்படத்தக்கதாக இருக்க வேண்டுமே தவிர அது அவர்களைப் புண்படுத்துவதாக இருக்கக் கூடாது. கல்வித் திணைக்களத்தில் பாடத் திட்டங்களை உருவாக்குவதற்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகள் தமது விருப்பு வெறுப்புகள் எப்படி இருந்தபோதிலும் சமயத்தில் கைவைக்கும் அளவுக்குத் தான்தோன்றித்தனமாக நடக்க அவர்களை அனுமதிக்க முடியாது. கல்வி அமைச்சரோ அன்றிப் பிரதம மந்திரியோ இந்து சமயத் தத்துவங்கள் பற்றியும் சைவத்தின் ஜீவாதாரக்கொள்கைகள் பற்றியும் நன்கு அறியாதவர்கள் என்ற காரணத்தால் அவர்களைப் பேய்க்காட்டி இந்துப் பெருமக்களின் எதிர்ப்பையும் வெறுப்பையும் அவர்களுக்குச் சம்பாதித்துக் கொடுக்க முனையும் அதிகாரிகளைச் சும்மாவிடககூடாது.

கல்வி அமைச்சர் காலந்தாழ்த்தாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறு செய்தவர்களுக்குத் தக்க தண்டனை அளிப்பதோடு நில்லாமல், தகுதியுடைவர்களின் ஆலோசனைப் பெற்று புதிதாக இந்துசமய பாடத்திட்டத்தை இந்துக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் தயாரிக்க வேண்டும்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 9214 D. C, J.
1. டேவிற் மனுவல
2. பெண் மேரி யோசெபின்
கரையூர் —வழக்காளி
எதிராக
1. முத்துவேலு சிவபாதசுந்தரம்
2. பெண் சிவஞானவல்லி
இணுவில் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B 9214-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970- ஆம ஆண்டு சித்திரை மாதம் 20-ம் திகதி (20—4—70) திங்கட்கிழமை முற்பகல் 11—00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 12689/-ம் 2—7—67 தொடக்கம் 24-12-69 வரைக்கும ரூபாய் 8000/—க்கு 12% வட்டியும அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் கொமிஷன் கொடுத்த செலவு ரூபா 15/— தீர்வைக்குட பின் 7670/— ரூபா கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு பகுதி உடுவில் கோவிற்பற்று இணுவில் றை (Odaipulam) ம் (Kallapulam) ஓடைப்புலமும் கல்லபுலமும் நி. பர. 3. 1/2 சொல்லப்பட்ட காணியில் மேற்குப்புறமாக நில பர. 2 கல்வீடும குசினியும் கிணறும கக்கூசும மற்றவைகளும எல்லை கிழக்கு முத்துவேலு சிவபாதசுந்தரம் பெண் சிவஞானவல்லியினுதனம வடக்கு சூரி தம்பிஐயா பெண் ... ஆதனம் மேற்கு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை றோட்டு தெற்கு இராசரத்தினத்துக்கும் பெண் சரஸ்வதிக்குமுரிய ஆதனம். சொல்லப்பட்ட கிணற்றில் பங்கும் பாதை உரித்தது வழிவாய்க்கால் பிறுத்தி காணிக்குப் போக புறநீங்கலாக கிழக்கெல்லைக்காணிக்கு தெற்கெல்லையிலிருக்கும கிணற்றில் வழிவாய்க்காலுரித்துக.

மா. முருகேசு, J. P.
கொமிஷனரும விலைமதிப்பாளரும
"இந்திரபவனம்"
புங்குடுதீவு, 18—3—70
எம். 478 27—3—70

## அலங்காரத் திருவிழா

நாயன்மார்கட்டு, குளத்தடி விநாயகர் கோயில் அலங்காரத் திருவிழா நாளை 28-3—70 ஆரம்பமாகின்றது (ந. நி.)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B, 9188
யாழ்ப்பாணம் நல்லூர் - கோவில் வீதி
1. திருநாவுக்கரசுசச்சிதானந்தன்
2. பெண் பத்மாதேவி.
—வழக்காளிகள்
எதிராக
யாழ்ப்பாணம் இருபாலை
1. ஐயம்பிள்ளை தருமலிங்கம்
2. பெண் சுந்தரம்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 9188-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படிபின்னுவ் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1970 – ஆம் ஆண்டு மே (வைகாசி) மீ 9 - ஆம திகதி (9-5-70) சனிக்கிழமை முற்பகல் 10—00 மணிதொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3440-/ம் இதல் ரூபா 2000-க்கு 24-6-67 திகதி தொடக்கம் 25—11—67 திகதி வரைக்கும் 100 க்கு 12 வீத வட்டியுப் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியப் கோட்டுச் செலவு ரூபா 286—80 சதமும்,

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க்கோவிற்பற்று கோப்பாய் தெற்கிறை "சந்தகை கொட்டுககுளி" கெற்பரப்பு 6, 1/2 ம்) வீடும் பயிர் களும எல்லை கிழக்கு தருமலிங்கத்தின் ஆதனமும ஒழுங்கை முகப்பும், வடக்கு பொன்னையா தம்பையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு கனகரெத்தினம் பெண் மாணிக்கத்தின் ஆதனம். தெற்கு சேனாதிராசா பெண் பறுபதபத்தினியின் உருமைக்காறருக்குரிய ஆதனம். இதடங்கலும். மூற் பதிவு 209/103.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner of Sales.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 16—2—70
M 474. 27—3—70

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 27—3—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

# மேன்மைகொள் சைவநீதி

அன்புள்ள சைவப் பெற்றோர்களே!

உங்கள் அருமந்த பிள்ளைகளைப் பழுகாக்காதீர்கள். அவர்கள் சைவப் பிள்ளைகள் சைவசமயத்தின் விசேஷ கொள்கை மாமிசம் புசியாதிருப்பதாகும். இதனாலேயே சைவ சமயம் புறச்சமயங்களிலும் மேலான சமயமாகும். எல்லா ஆன்மாக்களுக்கும் தந்தையாயிருப்பவர் சிவபெருமான் ஒரு ஆன்மாவை மற்றொரு ஆன்மா துன்பப்படுத்துவதை — கொல்வதைப் பார்த்து தந்தையாயிருப்பவர் சந்தோஷமடைவாரா? இல்லை. துன்பம் செய்பவருக்குத் தண்டனை கொடுப்பாரல்லவா?

"நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்" —குறள்

ஒரு உயிருக்குத் துன்பம் செய்தல்லவா அதன் ஊனை உண்கின்றீர்கள். பாவத்துக்கு வித்தாகிய மாமிச உணவை தவிருங்கள். சமயதீக்ஷை பெற்ற பின்பே ஒருவன் சைவனாகின்றான். ஏழு வயதுக்கும் ஒன்பது வயதுக்கும் இடையில் ஒருவன் சமயதீக்ஷை பெறவேண்டும். சமய தீக்ஷைபெற்று சைவ வாழ்வு வாழவேண்டிய குழந்தைகளை மாமிச உணவுக்காக சமய தீக்ஷை பெறுவதைத் தடுத்து அவர்களை பாவிகளாக்குகின்றீர்கள்.

சமய தீக்ஷையின் மூலமே இறைவனின் பாதங்களை அடையலாம் இறைவனின் பாதங்களை அடைந்தவர்களே பிறவித் துன்பத்தினின்றும் நீங்குவர்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேராதார்" —குறள்

( வளர்ச்சி 3 - ஆம் பக்கம் )

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. வேலுப்பிள்ளை இராசையா 2. பெண் யோகேசுவரி
சுண்டிககுளி, யாழ்ப்பாணம். —வழக்காளி
இல: M B 6349 D, C. J. எதிராக
1, விநாசித்தம்பி மகாலிங்கம் 2. பெண் கமலம்
மீசாலை, சாவகச்சேரி வடக்கு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 6349-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20-ம் திகதி (20—4—70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 638/ ம 21—1—64 தொடக்கம 14—12—64 வரைக்கும் ரூபாய் 500/—க்கு 12 % வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 % வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 181—35 எற்பட்ட செலவு ரூபா 120-75 முடிவான செலவு ரூபாய் 37—25 நிகழவிருக்கும்செலவு ரூபா 23—35

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறை 'கலட்டிக்குளி' வி. பரப்பு 4 வட புறமாக பிரிக்கப்பட்ட 1 பரப்பு செய்பயிர் வான்பயிர்களும் வீடும மற்றவைகளும் எல்லை கிழக்கு விநாசித்தம்பி குமாரவேலுவிற்கும் மற்றவைகட்கும் உரிய ஆதனம் எல்லை வடக்கு: நாகராஜா பெண் அன்னம்மாவினுதனம், எல்லை மேற்கு: கந்தையா பெண் அன்னப்பிள்ளையினுதனம், எல்லை தெற்கு: முன் கூறப்பட்ட விநாசித்தம்பி மகாலிங்கம் பெண் கமலத்தினுதனம். பதிவு இல: F 340/248

இந்திரபவனம், மா. முருகேசு J. P,
புங்குடுதீவு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
எம். 477 27-3-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வருத்தலைவிளான் 1. வி எஸ் தம்பிராசாவும் பெண்
2. சிவக்கொழுந்துவும் —வழக்காளிகள்
இல: M, B. 8698 எதிராக
கட்டுவன் 1. கந்தையா முத்துத்தம்பியும் பெண்
2. மாரிமுத்துவும் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8698ம் இலக்க வழக்கில எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970ம் ஆண்டு சித்திரை மாதம் 27—ம் திகதி (27—4—70) திங்கட்கிழமை முற்பகல் பத்து மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2783/- இன்னும் ரூபாய் 1500/—க்கு 23—12—66 தொடக்கம் 10—6—67 வரைக்கும் 9% வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 341—30 செலவில் ரூபாய் 200/— முதலில் ரூபாய் 2000/— கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பிரிவு தெல்லிப் பழை கோவிற்பற்று கட்டுவனிறை 'தண்ணீர் தாள்வு" பர. நிஸ். இலா. 5½ — 0 குளி வீடு, கிணறு செய்பயிர் வான்பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு காசிப்பிள்ளை பெண் சிவக்கொழுந்துவினுதனம் மேற்கு ஒழுங்கை, வடக்கு றோட்டு, தெற்கு கந்தையா பெண் முத்துப்பிள்ளையினுதனம். பதிவு இலக்கம் H. 292/269

167/1, கோவில் வீதி, நா. தருமலிங்கம்
நல்லூர் வடக்கு. விலைமதிப்பாளரும் ஏலவிற்பனவாளரும்
யாழ்ப்பாணம், 16.3.70 எம். 471 27—3—70